# சிறுவர் குரல்

குரல் 1 ஓசை 2

## கல்விச் சுமையா?



## எங்ஙனம் தவிர்ப்போம் !

வெளியீடு:-
சிறுவர் உரிமைகள் மாவட்ட கண்காணிப்புக்குழு
2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய உலகின் இன்றைய குரல்

பதிப்பாசிரியர் குழு.
**திருமதி.ப.திலகநாயகம்**
**திரு.து.வைத்திலிங்கம்**
**செல்வன்.எம்.கவிதரன்**



வெளியீடு
சிறுவர் உரிமைகள் மாவட்ட
கண்காணிப்புக்குழு,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்
2001

**அட்டைப் படம் வரைந்தவர்**

S.துஷ்யந்தன் Year II[D]
பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

முகவரி :
குழுகண்டி ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

## பதிப்பாசிரியர் பேனாவிலிருந்து........

நாளைய உலகின் நாயகர்களாம் சிறுவர் நலம் பேண அவர்தம் குரலை உலகெல்லாம் ஒலிக்க வைக்க "சிறுவர் குரல்" உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

போர்க் காலச்சூழ்நிலையில் பொலிவிழந்து நடைமெலிந்து தினம் விடியும் மண்ணில் சிறுவர்உரிமைகள், உணர்வுகள், சுயசெயற்பாடுகள் பாதிப்புக்கு உள்ளாவது இயல்பானதே!

இத்தகையதொரு சூழ் நிலையில் சிறுவர் நலன் சம்பந்தமான விழிப்புணர்வை சமூகத்தில் அவர்கள் தமக்கென முத்திரை பதித்து இவ்வுலகில் வீறு நடை போடவும் "சிறுவர் உரிமைகள் மாவட்டக் கண்காணிப்புக் குழு" வெளியிடும் இச் சிறுவர் குரலுக்கு எல்லாத் தரப்பினரதும் ஆதரவை நாடி நிற்கின்றோம்.

நன்றி

# உரிமைக் குரல்

**கவிநீரா சிவகுமார்**
**கொக்குவில்.**



கனவுகள்....ஆசைகள்...
இவை...
கருகும் எம்மவரின் உணர்வுகள்!
இல்லை... இல்லை...
இவை.. எம் நண்பர்கள் !!
கல்விக் கரையில்
கரைகாண நீந்தினோம்
மூழ்கிவிட்டோம்- மனித
மூடர்களால்!
அன்பிற்காய் ஏங்கி...
அணைப்பிற்காய் ... அலைந்து
உதிர்ந்து போனதோ...
எம் வாழ்வு!
எதற்கிந்த வாழ்வு....?
உரிமைக் குரல் எழுப்பினோம்
உதையும் வாங்கினோம்!
சோதனைகள் வரட்டும்!
நண்பர்களே,
சாதனைகள் புரிந்திடுவோம் வாரீர்!
சிறுவர்கள் என்று
சிறைப்படுவதா!?
சிறுமைப்படுவதா!!?
சிந்தியுங்கள்!
நிஜமில்லா உலகில்
நிஜத்தை தேடுவதா?
நிலையில்லா உயிரை
நிற்க வைக்க முடியுமா?
சிட்டுக்கள் நாம்
சிறகுகள் அறும்முன்னே
உரிமைக் குரல் எழுப்பி
உணர்த்துவீர் உலகிற்கு
சிறுவர் உரிமைகளை!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயத்தில் சிறுவர்களின் உரிமைகளும் பாதுகாப்பும்

20ஆம் நூற்றாண்டுக்கு பிரியாவிடை கொடுத்து 21ஆம் நூற்றாண்டை வரவேற்கும் நேரமுமாகிய இந்நேரத்தில் உலகெங்கும் உள்ள எத்தனையோ பிரச்சினைகளுக்கு மத்தியில் இன்று தலையாய பிரச்சினையாகக் காட்சி யளிப்பது சிறுவர்களின் உரிமைகள், பாதுகாப்பைப் பேணுவதில் உள்ள பிரச்சினையாகும்.

சமுதாயத்தில் சிறுவர்களின் உரிமைகளும் பாதுகாப்பும் என்ற விடயத்தின் கீழ் நாம் ஆராயமுற்பட்டால் முதலில் சமுதாயம் என்றால் என்ன? சிறுவர்கள் என்றால் யார்? அவர்களின் உரிமைகள் எவை? அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்புகள் என்ன? இவை இரண்டும் பறிபோவதற்கான காரணம் என்ன? சிறுவர்களுக்கான உரிமையையும் பாதுகாப்பையும் பெற்றுக்கொடுப்பதில் சமுதாயம் ஆற்றவேண்டிய பங்களிப்பு என்ன? என்ற விடயங்களைத் திறமையாக ஆராய்வோமானால் சிறுவர்களின் உரிமைகளும் பாதுகாப்பும் என்ற விடயம் "வெள்ளிடைப் பனிமலைபோல் தெள்ளத் தெளிவாக" எமக்குப் புரியும்.

சமுதாயம் என்பது அறிவும், ஆற்றலும், ஆளுமையும் மிக்க மனித குலம் வாழும் சூழலையே நாம் சமுதாயம் என்கின்றோம். கிராமிய மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும், உலகளாவிய ரீதியிலும் பரந்து காணப்படும்.

சிறுவர்கள் என்று நாம் குறிப்பிடுவது 18 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரையுமே சிறுவர்கள் என்று தெளிவாக வலியுறுத்துகின்றோம்.

சுதந்திரமாக வாழவும் தமது தேவைகளைக் கூறி அவற்றை பூர்த்தியாக்குவதில் முனைந்து செயற்படவும், தம்முடைய அறிவையும் ஆற்றலையும் திறம்பட வெளிக் காட்டுவதற்கும், ஆழ்ந்து சிந்தித்து செயற்படுவதற்கும், தம்முடைய மனதில் படுகின்ற எண்ணங்களை கருத்து வடிவமாக வெளியே தெரிவிப்பதற்கும் உரிமைகள் உண்டு. அந்த உரிமைகள் எக்காரணம் கொண்டும் சமுதாயத்தில் வாழ்கின்றவர்களினால் பறிக்கப்படக்கூடாது.

சிறுவர்களின் உடலுக்கும், உயிருக்கும், உரிமைக்கும், சுதந்திரத்துக்கும் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்காகவே அவர்களுக்குப் பாதுகாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படல் வேண்டும். அவர்களைத் திறமையுடன் வளர்த்தல், சிறப்புடன் கண்காணித்தல், நோய்கள் வராமல் காத்தல், அவர்களால் சமாளிக்கமுடியாத பிரச்சினைகளைத் தடுத்தல், அவர்களை சிறப்புடன் நல்வழிப்படுத்தல் போன்றவை சிறுவர்களுக்கு வழங்கப்படவேண்டிய பாதுகாப்புகள் ஆகும்.

ஒரு நாட்டில் வாழ்கின்ற குடிமக்கள் தொகையில் 45% ஆனோர் சிறுவர்கள். இந்தச் சிறுவர்களே நாளைய நம் பொன்னாட்டின் தலைவர்கள். இன்று இந்தச் சின்னஞ்சிறுவர்களை நாம் சரிவர முறைப்படி கவனித்தால்த் தான் நாளைய நம் சமூகத்தின் தலைவர்களாகி நம் சமூகத்தை சிறப்பாகக் கவனித்து அதனை நல்வழிப்படுத்துவார்கள்.

இன்று எமது நாட்டிலுள்ள சிறுவர்களுள் ஏறத்தாழ 26,000 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் நிற்கின்றார்கள் என்பது ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. இதற்குக் காரணம் என்ன என்பது பற்றி சிந்தித்தால் பல காரணங்களினை எம்மால் இனங்காணக் கூடியதாக உள்ளது.

பொதுவாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சிறுவர்களுக்கு அத்தியாவசியமான கல்வி பலதரப்பட்ட காரணிகளால் கிடைப்பதில்லை. இச் சிறுவர்களிற்கு கல்வியறிவு கிடைப்பதற்கு சமுதாயம் தங்களாலான பங்களிப்பைச் செய்ய முன்வரவேண்டும். குறிப்பாக ஏழை வீட்டுச் சிறுவர்கள் கற்கவேண்டிய ஆவல் இருந்தும் கற்பதற்கு அவர்களின் பெற்றோரிடம் வசதியீனம் காரணமாக கல்வியைக் கற்கமுடியாமல் போய்விடுகிறது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் இலவசக்கல்வி/இலவசப் பாடப்புத்தகம் போன்ற வசதிகள் இருந்தும் பாடசாலையில் ஏனைய தேவையான கொப்பிகள், பென்சில், பேனை போன்ற உபகரணங்களை வாங்குவதற்கு வழியில்லாத காரணத்தால் அவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது.

இதற்குச் சிறுவர்களின் நலன்மீது அக்கறை காட்டும் நிலையங்கள் முன்வந்து தம்மாலான நிதியுதவியை அளித்து ஏழை மாணவர்களின் கல்வி சிறப்படைய வழி வகுக்க வேண்டும்.

மிகவும் வறிய குடும்பத்திலுள்ள சிறுவர்கள் குடும்பத்தினரின் ஏழ்மை வறுமை காரணமாகத் தமது கல்வியைக் கைவிட்டு வேலைக்குச் செல்கி றார்கள். சிலர் குடிகாரத் தந்தையினால் தமது குடும்பம் சீரழிவைக் கண்டு கற்கும்திறன் இருந்தும் கற்க வேண்டும் என்ற ஆசையிருந்தும் முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தால் தமது கல்வியை கைவிடுகிறார்கள். இத்தகையவர்கள் கடைகளிலும் வீடுகளிலும் வேலை செய்கிறார்கள்.

இவ்வாறான குடும்பத்தினருக்கு சுயதொழில் வாய்ப்புக்களுக்கான கடன்வசதிகளை வழங்குவதனூடாகயே இவர்களும் வருமானம் பெறக் கூடியதாக இருக்கும். இவர்களின் பிள்ளைகளினதும் கல்வியும் பாதிப்படையாமல் பாதுகாக்கப்படும்.

முன்பு பாடசாலைகளில் மதியஉணவு வழங்கும் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வந்தது. பின்பு உணவு முத்திரையாக அதனை மாற்றி அமைத்து வழங்கி வந்தது. இந்தத் திட்டத்தின் காரணமாக மிகவும் வறிய, உணவுக்கே வழியில்லாத மாணவர்கள் மதிய உணவு கிடைக்கும் பாடசாலைக்குச் சென்றால் உணவு முத்திரை வரும் வயிறார உண்ணலாம் என்ற காரணத்தால் பெருந்தொகையான மாணவர்கள் பாடசாலை செல்வதற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள். ஆனால் இன்று உணவு வழங்கும் திட்டம் ஒன்றும் நடைமுறையில் இல்லாத காரணத்தால் பெருந்தொகையான மாணவர்கள் பாடசாலை செல்வதில்லை.

இதற்கு கொழும்பிலுள்ள தேசியமட்ட சிறுவர் கண்காணிப்புக் குழு இது பற்றி கலந்து ஆலோசித்து அரசாங்கத்தின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு முன்புபோல் உணவு வழங்கும் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். எத்தனையோ கிராமங்களில் போஷாக்கு இன்மையால் பல குழந்தைகள் பாதிப்படைந்து மரஸ்மஸ் எலும்புருக்கி போன்ற நோய்களினால் தாக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு திரிபோஷா, இலைக்கஞ்சி சத்துணவு வழங்கும் திட்டத்தைக் கைவிடாமல் திறம்பட நடாத்தி அவர்களின் போஷாக்கிற்கு வழிவகுக்க வேண்டும்.

எமது யாழ்.குடாநாட்டைப் பொறுத்த வரையில் உள்நாட்டு யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து வன்னி மாவட்டத்திற்கு சென்று அங்கு இரண்டு ஆண்டுகள் தங்கி தங்கள் கல்வியை கைவிட்ட சிறுவர்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பியபின் தங்களைவிட இரண்டு வயது குறைந்தவர்களுடன் சேர்ந்து படிக்கவேண்டும் என்ற தாழ்வு மனப்பான்மையாலும் சில மாணவர்கள் தங்கள் கல்வியைக்இடையிலேயே கை விடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மாணவர்கள் நன்றாகப் படிக்கும்போது அவர்களுடன் படிக்கும் கல்வியறிவு குறைந்த மாணவர்கள் அவர்களைப்போல் தங்களால் நன்றாகப் படிக்க முடியவில்லையே? ஏன் படிப்பான், படித்து என்ன பயன்? என்ற ஆதங்கத்தினாலும் வீட்டில் உள்ளவர்கள் "உனக்குப் படிக்கத் தெரியாது, நீயெல்லாம் ஏன் படிக்கிறாய் அவனைப்பார் என்னமாதிரிப் படிக்கிறான் நீயும் இருக்கிறாயே ஒன்றுக்கும் உதவாத மாடு" என்று பக்கத்து வீட்டுப் பிள்ளையைக் காட்டி அவனுக்கு முன்னர் வைத்து அந்தச் சிறுவனைத் திட்டும்போது வேதனை காரணமாகவும் சிலமாணவர்கள் தங்கள் கல்வியைக் கைவிட்டு வேலை செய்கிறார்கள்.

சில பாடசாலைகளில் சப்பாத்து/சொக்ஸ் போடவேண்டும் என்ற கட்டாயத்தினாலும் ஆசிரியர்கள் தங்கள் தவறுகளுக்கு தரும் தண்டனை களைத் தாங்கிக் கொள்ளமுடியாத காரணத்தாலும், பரீட்சைக்காசு, வசதிக் கட்டணக்காசு, விளையாட்டுப் போட்டிக்காசு, நவராத்திரிப் பூசைக்காசு, பரிசளிப்புவிழாக் காசு போன்ற பல்வேறு வகைப்பட்ட தேவைகளுக்காக பணம்கொடுக்க முடியாத காரணத்தாலும் மாணவர்களில் சிலர் பாடசாலைக்கு போகாமல் நிற்கின்றார்கள்.

இவர்களுக்கு பெற்றோர்களும், அதிபர்களும், ஆசிரியர்களும் சரிவர நடந்து நல்லமுறையில் அவர்களுக்கு வேதனைப்படாவண்ணம் எடுத்துக்கூறி அவர்கள் தங்கள் கல்வியைத் தொடர வழிவகுக்க வேண்டும்.

சில சிறுவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத காரணத்தால் பாடசாலை சேராமல் இருக்கிறார்கள். இடப்பெயர்வு காரணமாக அகதிகளாக இந்தியாவிற்குச் சென்றவர்கள் அங்கு பிள்ளைகளைப் பெற்ற பின்பு இங்கு வந்தவர்களில் சில பிள்ளைகளுக்கு தாய்தந்தை இருவரும் இல்லாதவர்கள் இவ்வாறான சிறுவர்களில் சிலர் பாடசாலை செல்லாமல் இருக்கிறார்கள்.

இவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் வழங்கல் அதனைப் பெற்றுக் கொடுத்தல், தாய்தந்தை சொந்தக்காரர்கள் இல்லாதவர்களை தத்துக்கொடுத்து அல்லது சிறுவர் நிலையங்கள் சேர்ப்பித்து அவர்கள் திறமையாக வளர்ந்து கல்வி பெற்று வளம்பெற கண்காணிப்புக் குழுவினர் வழிவகுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஆதரிக்க எவருமே இல்லாமல் எத்தனையோ சிறுவர்கள் அநாதைகளாய் வீதியோரத்தில் நாயாய் அலைந்து எச்சில் உணவுக்கு காகங்கள், ஆடுமாடு நாய்களுடன் போட்டியிட்டு அடிபட்டு காயப்பட்டு அழுக்கு நிறைந்த கிழிந்த ஆடைகளும் எண்ணெய் காணாத, சீப்புப் போடாத தலைகளுமாய் திரிந்து பசிக்காகத் திருடி பொய்சொல்லி மற்றவர் களினால் துன்புறுத்தப்பட்டு, அடிபட்டு, அவமானப்பட்டு வேதனைப்பட்டு நித்தமும் கண்ணீர் மயமாய் துன்புறுகின்ற பாலகர்களும் எம்மத்தியில் - சிலரேனும் இருக்கவே செய்கின்றார்கள்.

தெற்கில் மட்டுமன்றி இன்று வடக்கிலும் சில சிறுவர்கள் புகைத்தல், குடித்தல், சூதாட்டம், போதைவஸ்துப் பாவனை போன்ற தீயபழக்கங் களுக்கு உள்ளாகி அழிந்து போகின்றார்கள்.

கடல் சூழ்ந்த இப்பூமியிலே செந்தமிழைக் கற்ற அறிஞர்கள் முன்னி லையிலும், சட்டமும் நீதியும் தழைத்தோங்கும் நாட்டிலே நீதி வழங்கும் நீதிவான்களும் குற்றஞ் செய்தோருக்குத் தண்டனை வாங்கிக்கொடுக்கத் துடிக்கின்ற சட்டத்தரணிகள் முன்னிலையிலும் எத்தனை எத்தனையோ சிறுவர்கள் வேலைசெய்யும் இடங்களில் தங்கள் எஜமான்களின் கைவரி சையால் அடிபட்டு, உடைபட்டு ஆஸ்பத்திரியில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். இதிலும் ஒருபடி மேலாக யார்? எவர் என்று இனந்தெரியாத மனிதர்களால் கடத்தப்பட்டு தங்கள் உடல் உறுப்புக்களை இழந்து நிற்க கொடியவர்கள் கோடி கோடியாக பணம் சம்பாதிக்கின்ற நிலைமையும் உள்ளது. (வெளி நாடுகளில்)

இத்தகைய அட்டூழியங்களும் அநீதிகளும் ஒழிக்கப்பட்டு சிறுவர்களின் மீது நலன் கொண்டு அக்கறையுடன் அவர்களைப் பராமரித்து தீய செயல் நடவடிக்கையில் ஈடுபடாமல் அவர்களைத் காத்து நல்ல அன்பையும் அறிவையும் புகட்டி வாழ்க்கையில் தெவிட்டாத இன்பத்தைக் கொடுத்து அவர்கள் மனதிலே அமைதியும் சுபீட்சமும் நிலைபெற வழிவகுத்து வாழ நாம் அனைவருமே வழி செய்வோம்.

**செல்வி.மோனகுரு வலன்ரீனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச சிறுவர்தினத்தினை ஒட்டி வெளியிடப்பட்ட கவிதை

# சிறுவர் துன்புறுத்தப்படல்

**" பிள்ளை என் கவிமழையில் சொற்பிழை, பொருட்பிழை ஏதும் இருந்திடின் பொறுத்திடுவீர்கள் என வேண்டி தொடர்கின்றேன் என் கவியை நானுமிங்கே"**

செந்தமிழ்த் தேன்பொழியும் வண்ணத்தமிழ் நாட்டில்
எத்தனை துன்பங்கள் எத்தனை இடர்பாடுகள்
அவை எத்தனை எத்தனை எம்தலைவிதி
கையிரண்டு போதுமா இவைகளை எழுதிட
கார்போன்ற வீதியிலே குடுகுடென நடந்தோமே
இன்று நாம் முடங்குகின்றோம் நாளை
என்ன நடக்குமோ ஏது செய்யுமோ
தாயின் வயிற்றில் இருந்து பிறந்ததும்
குழந்தையாக பால் வடியும் முகமும்
அதற்கு பிறகு என்ன நடக்கும்
ஐந்து வயது தொடக்கம்(அ) என்ற
சொல்லை கற்கத் தொடங்கிடும் காலம்
சிறுவர் என்ற பெயர் வழியில்
உள்ள நாமும் எவ்வளவு துன்பப்படுகின்றோம்.
கல்வி கற்க பாடசாலை இருந்தால்,
ஆசிரியர் பற்றாக் குறை அதுவும்
ஆசிரியரும் பாடசாலையும் இருந்தால் தளபாடம் இல்லை
கல்வியைக் கூட துன்பப்பட்டு தான்கற்கவேண்டும்
அன்னியன் மட்டுமா? எம்மை துன்பப்படவைக்கின்றான்
எம் இன தமிழ் வெறிகள் கூட
பாலியல் வல்லுறவு தொடக்கம் எத்தனை
அழிவுகள் துன்பங்கள் அநியாயங்கள் எதைக் கூறுவது
எம் தலைவிதி என்றுதான் சொல்ல வேண்டும்
கவலைப் பட்டுத்தான் என்னகதை எழுதித்தான் என்ன
வாயுளைய கவிபாடினால் முடியுமோ எம் துன்பம்
போக்கிட கடவுள் கூட ஏங்கிடுவான் என்ன செய்ய
ஏது செய்ய எம் கடவுள் கைவிட்டு
விட்டார் ரியூசன் சென்றமகள் வரவில்லை
எங்கே என்மகள் என்றால் அவள்
ஓர் பற்றைக்குள் இறந்துகிடக்கிறார் அவருக்கு
என்ன நடந்தது அவளைபாலியல் வல்லுறவுக்கு
உட்படுத்திவிட்டனர் இதைஅறிந்தால் எம்தலை வெடிக்கும்
துன்பப்பட்டு எம்கல்வி இடையில்நிறுத்தப்படுமோ என்பதும்
ஒருபுறம்சிறுவர்கள் நாம் இப்படி துன்பப்பட்டால்
நாளை வரும் சந்ததியினரும் ஏது சொல்வது
ஆண்டவனே எம்மை துன்பமின்றி வாழ விடு!!

நன்றி

பா. அபிராமி
யா/ உசன் இராமநாதன்
மகாவித்தியாலயம்
ஆண்டு – 11

தற்காலிக முகவரி:S.குமாரசாமி (அபிராமி)
ஞானவைரவர் கோவிலடி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மொட்டுக்கள் மலரட்டும்

## ~ சிறுவர் உரிமைகளும் அதன் நடைமுறைகளும் ~

அதிகாலைப்பொழுது "பொல பொல" வென விடியத்தொடங்கியது கீழ்த்திசையில் சூரியன் தன் கதிரொளிகளை விரிக்கத் தொடங்கினான். எங்கிருந்தோ சேவல் தன் இனிய கீதத்தை மொழியத் தொடங்கியது. மரம், குழைகளிற் பட்ட பனித்துளிகள் மீது சூரியனின் கதிர்கள்பட்டதும் மினுங்கி அவை கண்சிமிட்டின. அந்த அதிகாலைப் பொழுதில் கூட செல்வம் வீட்டில் இரைச்சல் தான். பாவம்! அவர்கள்! அவனும் மனைவியான வசந்தியும் ஓர் குடும்பம். அவள் தான் குடிபுகும் வீட்டிலாவது முழுநேரமும் தனது அலங்காரத்தில் செலவிட்டாள். தனது சகமாணவிகளைப் போல தானும் செல்லவேண்டும் என்ற ஓர்ஆசை. தன்ஆசை நிறைவேறும் என்ற நம்பிக்கையும் இருந்தது. அப்படிப்பட்டவளுக்கு "பாடசாலையைப் பாதுகாக்கும் வேலையுள்ள" ஓர் இளைஞரான செல்வம் கணவனாக கிடைத்தான்.

செல்வமும் தன் மனைவி அழகாக இருக்கவேண்டும், சந்தோஷமாக இருக்கவேண்டும் என்று சேலைகள், அழகுப்பொருட்கள் என வாங்கிக் கொடுத்தான் அவன் இப்படி எத்தனை நாள் வாங்கிக் கொடுப்பது? அதுவும் அப்பொருட்களை தன் நண்பனிடம் கடன்பட்டு வாங்கிக் கொடுத்தான். இப்படியிருக்கையில் அவர்களுக்கு ஓர் ஆண்டுக்குப் பின் ஜானகி வந்து பிறந்தாள். வசந்தி தன் மகளை ஒழுங்காக வளர்ப்பது இல்லை. அடிப்பாள்., பேசுவாள். ஜானகி அழுவாள். செல்வம் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறுவான். பின் ஓராண்டு கழித்து ஜானகிக்கு ஒரு தம்பி பிறந்தான். அவனுடைய பெயர் ராஜா. ராஜா சரியாகத் தகப்பனின் முகச்சாயல். ஆனால் ஜானகி தாயின்நிறமும், தகப்பனின் முகச்சாயலும். வசந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் குழந்தைகளை "சனியன்களே எங்கே வந்து பிறந்தனீங்கள்" என்று திட்டுவாள். ஜானகிக்கு ஐந்து வயதாகி வந்தது. ராஜாவுக்கு இரண்டுவயது.

அன்று ஒருநாள் காலையில் ராஜாவும், ஜானகியும் களைப்பில் நித்திரை. வசந்தி வந்துபார்த்தாள் எல்லோரும் நல்ல நித்திரை. அவள் தன் வழமையான நிகழ்வை விடவேஇல்லை. "சனியன்களே இன்னுமா நித்திரை. எழுந்து வீட்டைக் கூட்டு வேலைகளைப் பாருங்கள்" என்றுகூறி இரண்டு அடி அடித்தாள். இரண்டு பச்சைக் குழந்தைகளும் துள்ளி எழுந்தனர். எழுந்தவுடன் ராஜா தாயிடம் சென்று "அம்மா தேநீர் தாருங்கள் தண்ணீர் விடாய்க்குது." என்று கூறினான். அப்போது அவள் " ஆளைப்பாரன் இப்பதான் நித்திரை யால் எழும்பிவந்திட்டு, காகம் மாதிரிநிறம், தேநீர் தரட்டாம் தேநீர்" என்று அதட்டி விரட்டினாள். பாவம்! செல்வம். அவன் காலையில் வெளியேசென்றால் வீடுவந்துசேர மாலையாகும்.வந்தவுடன் பிள்ளை களின் தலையைத்தடவிக்கொண்டு அலுப்பில் படுத்துவிடுவான்.

ராஜா அழுது கொண்டு அக்காவிடம் சென்று சொன்னான். "அக்கா! அக்கா! "ஏன் அக்கா அம்மா இப்படி சிடுமூஞ்சியா இருக்கா" தேநீர் கேட்டால் அடிக்க வருகிறாங்க" என்று அழுது கொண்டு கேட்டான். ஜானகிக்கு அழுகைவந்தது. அவள்பட்ட துன்பம் எவ்வளவோ? சொல்லில் அடங்கா. அவள் அவனைத் தேற்றிக்கொண்டு "என்ர ராஜாவெல்லே. அம்மா அப்படித்தான். உனக்கு என்னவேணும் என்றாலும் என்னிடம் வந்துகேள்" என்று கூறி அவனை அணைத்து முத்தமிட்டு சமையலறைக்கு அழைத்துச் சென்று தேநீர் ஊற்றி அவனுக்குக் கொடுத்தாள். வசந்தி மத்தியானம் மட்டும் உணவு செய்வாள் மற்ற நேரமெல்லாம் தன் அலங்கார வேலைகளிலும், நண்பர்களின் வீடுகளுக்கும் சென்றும் பொழுதைக் கழிப்பாள்.

அன்று ஒருநாள் ராஜா தாயிடம் சென்று "அம்மா பசிக்குது சோறு ஊட்டிவிடம்மா" என்று கெஞ்சினான். அப்போது அவள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலால் தள்ளிவிட்டு " சனியனே, நாயே, பேயே" என்று பேசத் தொடங்கினாள். அவன் அழுதுகொண்டு தமக்கையிடம் சென்று "அக்கா அக்கா ஏன் அக்கா எனக்கு மட்டும் அம்மா சோறு ஊட்டிவிடுறதில்லை. பக்கத்துவீட்டு தம்பிக்கு அவனது அம்மாதான் சோறு எல்லாம் ஊட்டிவிடுகின்றா" என்று அழுதழுது சொன்னான். அவள் அவனைத் தேற்றிக் கிணற்றடிக்கு அழைத்துச் சென்று முகம் கழுவிவிட்டாள்.

ஒரு நாள் வசந்தி எங்கோ சென்றிருந்தாள். மாலையாகியும் வரவில்லை. செல்வம், பிள்ளைகள் எல்லோருக்கும் ஓரே கவலை. பின்பு தான் தெரிந்தது, நெல்லியடி பஸ் விபத்தில் அவள் சிக்குண்டு அவ்விடத்திலேயே பலியானாள். அன்றிலிருந்து ராஜாவும், ஜானகியும் தாயில்லாத பச்சைக்குழந்தைகள். அவர் களைப் படிப்பிக்க வேண்டும் என்று செல்வம் முயற்சிசெய்து அவர்கள் இருவரையும் பாடசாலையில் சேர்த்து பாடங்களைப் படிக்கவிட்டான். அன்றிலிருந்து அச்சிறுவர்கள் தங்கள் தாயின் அகோரச்செயல்களைக் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து நல்ல கல்வியைக் கற்றுக்கொண்டனர்.

செல்வம் கொஞ்சம் சொஞ்சமாக மனத்தைத் தளர்த்தித் தேற்றினான். ராஜாவும், ஜானகியும் பட்ட வேதனைகளை எல்லாம் நினைத்து நினைத்து அழுவார்கள். தம் தந்தைதான் தமது பெற்றோர் என்றுஎண்ணி அவர்கள் தங்கள் வாழ்க்கையில் படித்து முன்னேறினர். அந்தப் பச்சைக் குழந்தைகள் பட்ட வேதனைதான் அவர்கள் வளர்ந்த பின்பும் மனதில் பதிந்துகொண்டிருந்தது. சிறுவர்களுக்கு சுதந்திர உரிமை இல்லையா? பேசுவதற்கு உரிமை யில்லையா? எல்லாவற்றிற்கும் பெரியோர்களுக்கு உரிமை உள்ளது போலவே சிறுவர்களுக்கும் அவ்வுரிமை இல்லையா? ஒரு நல்ல காலம் பிறக்காதா? சந்தோஷமாக இவ்வுலகில் வாழ இடமில்லையா? என்ற கேள்விகள் எல்லாம் அவர்களின் பிஞ்சு மனத்திற் தோன்றின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# வாசகர் கருத்துக்கள்

உங்கள் சிறுவர் குரல் சஞ்சிகையானது வெளியிடப்பட்டதனை இட்டு பெருமிதம் கொள்கின்றோம். மேலும் அச்சஞ்சிகையில் சிறுவர்களின் மனதைக் கவரக் கூடிய வகையிலும் பல பக்கங்களைக் கொண்ட சஞ்சிகையாக மிளிரவேண்டும் என்பதையும் நாம் விரும்புகின்றோம்.

யா/அளவெட்டி அருணோதயாக் கல்லூரிமாணவர்கள்
**பாடசாலை மட்ட செயற்பாட்டுக்**
**குழு அங்கத்தவர்கள்**
(சிறுவர் உரிமைகள்)

சிறுவருக்கென யாழிலிருந்து வெளிவரும் முதல்தரமான சஞ்சிகை "சிறுவர் குரல்" குறித்து சிறுவர் என்ற வகையில் நான் பேருவகையடைகின்றேன். பல்வேறு பக்கங்களில் "கலர் புல்லாக" அனைத்துப் பகுதிகளுக்கும் சிறுவர்குரல் சென்றடைய வேண்டும் என்று எமது பேருவகை. எமது எண்ணங்கள் நிறைவேற வாழ்த்துக்கள்.

**வ.ஜெயக்குமார்**
**திருநெல்வேலி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989ம் ஆண்டில் ஐ.நா. பொதுச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1991ம் ஆண்டில் இலங்கை அரசு அதனை உறுதிப்படுத்தியது.

**சமவாயத்தை நடைமுறைப்படுத்தல்**

சமவாயத்தில் அடங்கியுள்ள உரிமைகள் நடைமுறைசாத்தியமாக்குவதற்கு அரசாங்கம் தன்னாலான அனைத்தையும் செய்தல் வேண்டும்.

**பெற்றோரின் வழிநடத்தலும் குழந்தையின் வளர்ச்சியும்**

குழந்தைக்கு அதன் பரிமாண வளர்ச்சிக்கு இசைவான முறையில் வழிகாட்டும் பொறுப்பு பெற்றோருக்கும் குடும்ப வட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் உண்டென்பதை அரசாங்கம் மதித்தல் வேண்டும்.

**உய்வும் மேம்பாடும்**

ஒவ்வொரு குழந்தைக்கும் உயிர்வாழும் உரிமை பிறப்போடு கூடியதொன்றென்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் உய்வையும், மேம்பாட்டையும் உறுதிப்படுத்தும் கடப்பாடு அரசாங்கத்தினுடையதாகும்.

**பெயரும் நாட்டினமும்**

ஒவ்வொரு குழந்தையும் பிறந்ததும் ஒரு பெயரைப் பெறும் உரிமையுடையதாகும். அத்துடன் ஒரு நாட்டினத்தைச் சார்வதற்கும் தன் பெற்றோர் இன்னாரென்று அறிவதற்கும் அவர்களால் பராமரிக்கப்படுவதற்கும் அது உரிமையுடையதாகும்.

இவ்விதழ் தொடர்பாக சிறுவர்களிடமிருந்து ஆக்கங்களினையும் மற்றும் அனைவரிடத்திலிருந்து விமர்சனங்களையும் வரவேற்கின்றோம்.

**உங்கள் தொடர்புகளுக்கான எமது முகவரி**
தலைவர் : சிறுவர் உரிமைகள் மாவட்டக்-
கண்காணிப்புக்குழு.
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org